4th November 1966]

மேலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வைத்துக்கொள்வதற்கு ஒரு லட்சியமும் இருக்கிறது. எந்த அளவுக்கு செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் வைத்துக்கொள்ளலாம் என்று விதிக்கப்பட்டிருக்கிறதோ அதற்கு மேலே செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஒரு பள்ளியில் பணியாற்றுகிறார்கள் என்றால், அவர்களுக்கு ஏற்கனவே உள்ள சம்பளவிகிதம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒருசில இடங்களில் பயிற்சி பெறாத ஆசிரியர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. அந்த இடங்களுக்கு அத்தகைய ஆசிரியர்கள் போவதற்குத் தயாராக இருக்க வேண்டும். இதெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிற விஷயம்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : அரசாங்கம் கொடுத்திருக்கிற தகவல்படி 5,000 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் ஹையர்கிரேடு ஆசிரியர்களாக பணி செய்யக் கூடிய நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிய கொள்கைக்கு இணங்க மூன்றாவது வகுப்பிலிருந்தே ஆங்கிலம் கற்பிப்பதற்கு வழி செய்ய வேண்டுமென்றால், ஹையர் எலிமெண்டரி ஸ்கூல்ஸ், எலிமெண்டரி ஸ்கூல்ஸ் உள்பட எல்லாப் பள்ளிகளிலும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களை வகுப்புதோறும் நிறுவுவதற்கு ஏற்பாடு செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடிக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதிலெல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

*** 385. கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும் நீண்டகாலமாக பணியாற்றிவரும் நெசவு ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) They were not fully qualified for regular appointment.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி எத்தனை ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள் ? எத்தனை ஆண்டுகளாக இருக்கிறார்கள் என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஆனால், போதிய தகுதி இல்லை என்றால், அவர்களை நிரந்தரம் ஆக்குவது சரியல்ல என்பதுதான் அரசாங்கத்தின் கருத்து.